**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.312/2015**

நாள்: 30.07.2026.

பெயர்: சக்திவேல் (வா.சா.1) த/பெ: கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...

1) என்னுடன் பிறந்தவர்கள் சுந்தரவடிவேல், தனலெட்சுமி, தமிழரசி ஆகியோர்கள் என்றால் சரிதான். எனது தந்தை, நான் மற்றும் எனது சகோதரர் ஆகியோர் சேர்ந்து 04.02.2004 பதிவு செய்த பாக அட்டவணை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான், அந்த பாக அட்டவணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், எனது தந்தைக்கும் அவர் இறக்கும் வரை விரோதம் ஏதும் இல்லை என்றால் சரிதான். 04.02.2004 பாக அட்டவணையில் A அயிட்ட சொத்து எனது தந்தை கலியபெருமாளுக்கும், B அயிட்ட சொத்து எனக்கும், C அயிட்ட சொத்து சுந்தரவடிவேலுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தைக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தைப் பொறுத்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) எனது தந்தை 2ம் பிரதிவாதிக்கு எந்த சொத்தைப் பொறுத்து உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் 5 இன சொத்துக்கள் உயில் எழுதிவைத்தார், அதில் ஒரு சொத்தின் சர்வே எண்.146/1G ஆகும், இதர சர்வே எண்கள் ஞாபகம் இல்லை, அந்த உயிலைப் பற்றி எனக்கு 2015 ஆம் ஆண்டு தான் தெரியவந்தது. என்னிடம் காட்டப்படும் உயில் தான் எனது தந்தை எழுதிவைத்த உயில் என்றால் சரிதான். அந்த அசல் உயில் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலுள்ள கையொப்பங்கள் எனது தந்தையுடையது தான் என்றால் சரிதான். 12.10.2012ல் கலியபெருமாள் 1ம் பிரதிவாதிக்கு எந்தெந்த சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் ஏரிக்கு பக்கத்தில் 24 செண்ட் சொத்து எழுதிவைத்துள்ளார்.

3) 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த உயிலில் கண்ட சொத்தின்

நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் 5 இன சொத்துக்களாக மொத்த அளவு 1 ஏக்கர் 50 செண்ட் ஆகும், அவற்றுள் சர்வே எண்.146/1G ன் நான்கெல்லை விபரம் மட்டும் தான் தெரியும், அது வடக்கில் சக்திவேல், சுந்தரவடிவேல், கிழக்கில் செல்வராசு வகையறா, தெற்கில் ரோடு, மேற்கில் குப்பம்மாள், கிருஷ்ணமூர்த்தி. நான் தற்போது கூறிய நான்கெல்லை விபரத்தை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 12.10.2012 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு, எனது தந்தை எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் எத்தனை இன சொத்துக்களுக்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5 இன சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களான 5 இன சொத்துக்களும் 04.02.2004 பாகத்தில் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்துக்களை தவிர்த்து இன்னும் சில சொத்துக்களும் எனது தந்தையின் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இதர சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் தாவடநல்லூர் கிராமத்தில் 1 ஏக்கர் 50 செண்ட், அழகாபுரம் கிராமத்தில் 1 ஏக்கர் 64 செண்ட் ஆகிய சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

4) தாவா சொத்துக்களுக்கு பட்டா 2ம் பிரதிவாதி சுந்தரவடிவேல் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை எழுதிவைத்த உயில் அவர் இறந்தபின்னர் அமலுக்கு வந்துவிட்டது என்றால் அந்த உயில் பற்றி எனக்கு 2015 ஜனவரியில் சிட்டா எடுத்து பார்க்கும் போது தான் தெரியும். எனது தந்தை 04.10.2014 தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் பாகம் கேட்டு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதி தரப்பில் பதிலறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

5) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 பதிலறிவிப்பு நான் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிடைக்கப்பெற்ற பின் எனது தந்தை எழுதிய உயிலை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனது தந்தை எழுதிய உயிலில் தாவா சொத்தில் எந்தெந்த சொத்துக்கள் உயிலில் குறிப்பிட்டு

எழுதப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து அனைத்தையும் எழுதிவைத்துள்ளார், எனது தந்தை எழுதியதாக கூறப்படும் உயில் 2007ல் எழுதப்பட்டது, ஆனால் எனது தந்தை தமிழரிசியிடம் கிரையம் பெற்ற சொத்தை 2011 ஆம் ஆண்டு தமிழரசிக்கே கிரையம் கொடுத்துவிட்டார், அதன் பின்னர் 2012ல் தமிழரசி, சுந்தரவடிவேல் ஆகியோருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். எனது தந்தை தமிழரசி, சுந்தரவடிவேல் ஆகியோருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த செட்டில்மெண்ட் எழுதிய சமயத்தில் நான் அழகாபுரத்தில் எனது குடும்பத்துடன் தனியாக வசித்து வந்தேன், இருப்பினும் நான் லாரி ஓட்டி சம்பாரித்த பணத்தை எனது தந்தையிடம் தான் கொடுத்துவந்தேன். நான் லாரி ஓட்டி சம்பாரித்த பணத்தை எனது தந்தையிடம் கொடுத்துவந்தேன் என்று தற்போது நான் கூறுவதை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் தெரியாது, எனது வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். தாவா சொத்து எனது கூட்டனுபவத்தில் இல்லை என்றால் பிரதிவாதிகள் மோசடியாக எழுதி வாங்கிக்கொண்டு அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள், எனது மனைவியும் அங்கு கிடைக்கும் முந்திரிகளை எடுத்துவருவார், நான் லாரி வேலை சென்றுவிடுவேன். நான் தற்போது எனது மனைவி முந்திரிகளை எடுத்துவருவார் என்று கூறியதை எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். நான் கூறுவது போல் எனது மனைவி முந்திரிகளை எடுக்கவில்லை என்றாலும், தாவா சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) எனது தந்தைக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் சுந்தரவடிவேலுக்கு உயில் மூலம் எழுதிவைத்து, அந்த உயில் படி சுந்தரவடிவேல் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, எனது மனைவியும் அடிக்கடி அந்த சொத்துக்களுக்கு சென்று வருவார். நான் அந்த சொத்துக்களுக்கு போவதில்லை என்றால் சரியல்ல, அவ்வபோது சென்று வருவேன். நான் தாவா சொத்துக்களுக்கு சென்று வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால்

சரியல்ல, எனது மனைவி முந்திரி கொட்டைகளை எடுத்து சேர்த்து வைப்பார் நான் வேலை முடிந்தவுடன் அங்கு சென்று அவைகளை எடுத்துவருவேன். நான் கூறுவது போல் எனது மனைவி முந்திரி கொட்டைகளை எடுப்பதில்லை என்றாலும், அதை நான் எடுத்து வந்ததில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களில் என்ன உள்ளது என்றால் முந்திரி, மாமரம் ஆகியன உள்ளது. தாவா சொத்துக்களை நான் அனுபவம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியா வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/க.சக்திவேல்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.